தினமணி

# பாசன சங்கங்களின் பலம்; விவசாயிகளுக்கு வளம்

கி. சிவசுப்பிரமணியன்

First Published : 11 Nov 2011 01:20:01 AM IST

இந்தியா போன்ற வளரும் நாடுகளின் முதுகெலும்பாக இன்றும் விளங்கி வருவது வேளாண்மையே ஆகும். ஏறத்தாழ 60 சதவிகித மக்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் இத்தொழிலில் ஈடுபட்டுள்ளனர். நீர்ப் பாசனம்தான் வேளாண் வளர்ச்சிக்கு அடிப்படையாகும்.

ஆறுகள், ஏரிகள், கிணறுகள் மற்றும் இதர வகை என நான்கு வகை பாசன ஆதாரங்கள் உணவு உற்பத்தியின் வளர்ச்சியில் பெரும்பங்கு வகிக்கின்றன. தமிழகத்தில் இதர வகைப் பாசனம் தவிர மற்ற மூன்றும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

தமிழகத்தில் 1960-களில் ஏரிப்பாசனம் முதலிடத்திலும், ஆறுகள் மூலமான கால்வாய்ப் பாசனம் இரண்டாம் இடத்திலும், கிணற்றுப் பாசனம் மூன்றாம் இடத்திலும் இருந்தது.

இந்நிலை கடந்த 40 ஆண்டுகளில் தலைகீழாக மாறியுள்ளது. அதாவது தற்பொழுது கிணற்றுப் பாசனம் முதலாவதாகவும், ஆற்றுப் பாசனம் இரண்டாவதாகவும், ஏரிப்பாசனம் மூன்றாவதாகவும் உள்ளது.

தமிழகத்தில் 2005-ம் ஆண்டு எடுத்த கணக்கெடுப்பின்படி 40,319 ஏரிகள் உள்ளன. இதில் பதிவு செய்யப்பட்ட மொத்த சாகுபடிப் பரப்பு ஏறத்தாழ பத்து லட்சம் ஹெக்டேர் ஆகும். தமிழக ஏரிகள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

ஒன்று, பொதுப் பணித்துறையின் பராமரிப்பில் உள்ள 40 ஹெக்டேருக்கும் அதிகமான பரப்பு கொண்ட ஏரிகள். இவற்றின் எண்ணிக்கை 11,008, இதன் மூலம் பயன்பெறும் பாசனப் பரப்பு 8,17,703 ஹெக்டேர். மற்றொன்று - பஞ்சாயத்து யூனியன் கட்டுப்பாட்டில் 40 ஹெக்டேர் பாசன அளவுக்கு கீழ் உள்ள ஏரிகள். இவற்றின் எண்ணிக்கை 29,311. இதன் மூலம் பயன்பெறும் பாசனப் பரப்பு 1,94,159 ஹெக்டேர்.

ஏரிகளைப் பொருத்தவரை அதன் பராமரிப்பு மிக மிக முக்கியமானது. ஏனெனில், இவற்றின் அமைப்பு இயற்கையான முறையிலேயே வடிவமைக்கப்பட்டது. ஒவ்வோர் ஏரிக்கும் நீர்வரத்துக் கால்வாய், ஏரிக்கரை, மதகு, கலுங்கு மற்றும் நீர் கொள்ளும் பகுதி என இயல்பான அமைப்புகள் இருக்கின்றன.

இவை ஒவ்வொன்றையும் தொடர்ந்து சரியான முறையில் பராமரித்தால் அனைத்து ஏரிகளும் அவற்றின் முழு கொள்ளளவுக்குத் தண்ணீர் பெற்று அவற்றின் கீழ் உள்ள அனைத்து நிலங்களும் முழுமையாக நீர்ப்பாசனம் பெறும்.

ஆனால், தற்போது ஏறத்தாழ பாதியளவு ஏரிப்பாசன நிலங்கள் மட்டுமே தொடர்ந்து சாகுபடியின் கீழ் உள்ளன. மீதமுள்ள ஏரிப்பாசன நிலங்கள் சாகுபடி செய்யப்படாமலும், வேலிக்காத்தான் முள் வளர்ந்த நிலையிலும் உள்ளன.

மேலும் வீட்டுமனைகள், கட்டடங்கள் மற்றும் பல்வேறு இதர உபயோகங்களுக்காக உரிய அனுமதியின்றி ஆக்கிரமிப்புக்கு உள்ளாகி உள்ளன. அதை மீட்க இயலாமல் ஏரிப்பாசன நிலைமை மிகவும் மோசமடைந்து வருகிறது.

இந்நிலைமைகளை எல்லாம் கருத்தில்கொண்டு தற்போது கடந்த 5 ஆண்டுகளாக தமிழகத்தில் உலக வங்கியின் உதவியுடன், ""நீர்வள நிலவள மேலாண்மைத் திட்டம்" என்ற பெயரில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின்படி தமிழகம் முழுவதுமாக ஏறத்தாழ 5,200 பொதுப் பணித்துறை ஏரிகளில் வரத்துக் கால்வாய் சீரமைப்பு, ஏரிக்கரைகளைப் பலப்படுத்துதல், மதகுகள் மற்றும் கலுங்குகளைச் சீரமைத்தல் எனப் பல்வேறு பணிகள் நான்கு கட்டங்களாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்பணிகள் எல்லாம் பொதுப் பணித்துறை மூலம் செயல்படுத்தப்படுவதால் விவசாயிகளின் பங்கு என்பது மிகவும் குறைவாகவே உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, உலக வங்கி இத்திட்டத்துக்கு நிதி உதவி (ஏறத்தாழ ரூ. 2,200 கோடி) அளிக்கும்போதே அனைத்து விவசாயப் பயனாளிகளையும் இப்பாசன மேம்பாட்டுத் திட்டத்தில் முழுமையாக ஈடுபடுத்தும் நோக்கில் நீர்ப்பாசனக் குழுக்கள் அனைத்து ஏரிகளிலும் அமைக்கப்பட்டன.

இத்திட்டம் விவசாயப் பயனாளிகளின் துணையோடு செயல்படுத்தப்பட வேண்டும் என அறிவுறுத்தியது. அதன்படி பொதுப் பணித்துறை உதவியுடன் அனைத்து ஏரிகளிலும் நீர்ப்பாசனக் குழுக்கள் இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி அமைக்கப்பட்டுள்ளன.

இருப்பினும், ஏரி நீரைப் பயன்படுத்துவோரை முழுமையாக உள்ளடக்கிய இந் நீர்ப்பாசனக் குழுக்கள் அனைத்தும் இன்றளவும் பெயரளவிலேயே உள்ளன. ஏரிகளின் மேம்பாட்டுக்கான எந்த ஒரு நடவடிக்கையிலும் கடந்த சில ஆண்டுகளாக அவை ஈடுபட்டு வந்ததற்கான அறிகுறிகளே தென்படவில்லை.

ஏரிப்பாசனக் குழுக்களில் சட்டப்படி தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களாக இருந்துகொண்டு அவர்கள் பயன்படுத்தும் ஏரிகளிலேயே என்னென்ன திட்டப் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளன என்பதே பெரும்பாலானவர்களுக்குத் தெரியவில்லை.

இந்த நிலையானது, விவசாயிகள் இன்னும் முழுமையாக எதையும் புரிந்துகொள்ளும் நிலைக்கு விழிப்புணர்வு அடையவில்லை என்பதையே காட்டுகிறது.

இந்நீர்ப்பாசனக் குழுக்களுக்குத் தலைவர் (1), தொகுதி உறுப்பினர்கள் (4) மற்றும் துணைக்குழு உறுப்பினர்கள் (16) எனக் குறைந்தபட்சம் 21 தேர்ந்தெடுக்கப்பட்ட பயனாளிகள் ஒவ்வொரு நீர்ப்பாசனக் குழுவிலும் இடம்பெற்றிருந்தும் எவ்விதச் செயல்பாடும் நடைபெறவில்லை.

இவர்கள் தங்களுடைய பொறுப்புகள் மற்றும் பணிகள் பற்றி அறிய அரசு பல வழிமுறைகளைக் கையாண்டு வருகிறது. அதன்படி 2000-ம் ஆண்டு முதல் 2007-ம் ஆண்டு வரை நீர்ப்பாசனக் குழுக்களைச் செம்மைப்படுத்துவதற்காகவும், ஏரிகளை ஆக்கிரமிப்புகளிலிருந்து பாதுகாக்கவும் பல்வேறு சட்ட விதிமுறைகளைத் தமிழக அரசு இயற்றியுள்ளது.

ஆனால், இவை எதைப் பற்றியும் பெரும்பாலான நீர்ப்பாசனக் குழுக்கள் அறிந்திருக்கவில்லை. உண்மையில் பல நீர்ப்பாசனக் குழுத் தலைவர்கள் அரசு வெளியிட்டுள்ள சட்ட விதிமுறைகள் அடங்கிய புத்தகங்களை வைத்துள்ளனர். ஆனால், அதில் என்ன கூறப்பட்டுள்ளது என்பதைப் படித்தறிய அல்லது கேட்டறிய விருப்பமற்றவர்களாக உள்ளனர்.

ஊராட்சிமன்றத் தலைவர்கள்போல் தங்களுக்குத் தனிப்பட்ட செயல்பாட்டு அதிகாரம் எதுவும் வழங்கப்படவில்லை என அவர்கள் கூறிவருவது "கையில் வெண்ணெய் வைத்துக்கொண்டு நெய்க்கு அலைந்தாற்போல்' உள்ளது மிகவும் வருந்தத்தக்கதாகும்.

மேலும் இந்நிலையானது, விவசாயிகள் தாங்களாக ஒன்றுசேர்ந்து எதையும் செயல்படுத்துவதற்கு, அரசு நீர்ப்பாசனக் குழுக்கள் மூலம் முழு அங்கீகாரத்தை சட்டப்பூர்வமாக வழங்கியும், அவர்கள் இன்றளவும் அதைப் புரிந்துகொள்ளவில்லை, புரிந்துகொள்ள விரும்பவுமில்லை.

இப்படிப்பட்ட சூழ்நிலையில், நீர்ப்பாசன சங்கங்கள் விழிப்புணர்வு பெறவும், பொதுப் பணித்துறை மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களின் முழுப் பயனும் விவசாயிகளுக்குக் கிடைக்கவும் செப்பனிடப்பட்டு, சீர்படுத்தப்பட்டுள்ள ஏரிகளின் பராமரிப்புப் பணியை எதிர்காலத்தில் பாசனதாரர்களே முன்னின்று மேற்கொள்ளவும் அனைத்து விவசாயப் பயனாளிகளுக்கும் விழிப்புணர்வு மற்றும் புரிந்துணர்வு கருத்தரங்குகளை அரசு முன்னின்று செயல்படுத்த வேண்டியது முக்கியப் பணியாகும். பாசன சங்கங்கள் பலம் பெற்றால் வேளாண் உற்பத்தி கணிசமாகப் பெருக வாய்ப்பு உண்டு.

ஆண்டுதோறும் பெய்கின்ற வடகிழக்குப் பருவமழையால் இந்தியாவிலேயே தமிழகம் மட்டும் அதிக அளவு மழை பெறுகிறது. ஏரிப்பாசனத்தின் வளர்ச்சி, ஏரிகளுக்குக் கிடைக்கிற நீரின் அளவைச் சார்ந்ததாகும்.

"காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்' என்ற பழமொழிக்கிணங்க இயற்கையின் கொடையாகிய மழை நீரை இத்தருணத்தில் ஏரிகளில் முழுமையாகத் தேக்கி வைத்து, ஏரிகளைச் சரிவரப் பராமரித்து, நீர்ப்பாசன சங்கங்களை உயிரோட்டமுள்ளதாக மாற்றி, துரிதமாகச் செயல்பட்டால் வேளாண் உற்பத்தியில் தொடர்ந்து பெரும் பலன் காணலாம்; அதன் மூலம் விவசாயிகளின் வாழ்வும் வளம் பெறும்.

கட்டுரையாளர்: சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தின் துணைப் பேராசிரியர்.

**பிசான சாகுபடிக்கு நெல்லை மாவட்டத்தில் கடனாநதி, ராமநதி அணைகள் திறப்பு**

அம்பை ஷேக்

First Published : 10 Nov 2011 05:48:14 PM IST

அம்பாசமுத்திரம், நவ. 10: திருநெல்வேலி மாவட்டத்தில் கடனாநதி, ராமநதி அணைகளில் இருந்து வியாழக்கிழமை பிசான பருவ சாகுபடிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் ஆழ்வார்குறிச்சி, கடையம் பகுதியில் 14,867 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

மேற்குத் தொடர்ச்சி மலையில் அணைகளின் நீர்பிடிப்பு பகுதியில் பெய்த மழையினால் திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அணைகளில் கடனாநதி அணை முதலில் நிரம்பியது. 85 அடி கொள்ளளவு ராமநதி அணையின் நீர்மட்டம் 79.25 அடியாக உயர்ந்தது. 143 அடி கொள்ளளவு கொண்ட பாபநாசம் அணையின் நீர்மட்டம் 100 அடியை தாண்டியது. 153 அடி கொள்ளளவு கொண்ட சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 114 அடியாக உயர்ந்தது. இதையடுத்து பிசான பருவ சாகுபடிக்கு அணைகளில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.

இதை தொடர்ந்து கடனாநதி, ராமநதி அணைகளில் இருந்து வியாழக்கிழமை தண்ணீர் திறந்து விடப்பட்டது. சிற்றாறு வடிநில கோட்ட செயற்பொறியாளர் தங்கவேல் இவ்வணைகளில் இருந்து பாசனத்திற்கு தண்ணீர் திறந்து வைத்தார்.

கடனாநதி அணையில் இருந்து பாசனத்திற்கு 125 கனஅடி தண்ணீர் திறக்கப்பட்டது. இதன் மூலம் அரசபத்து கால்வாய், வடகுருபத்து கால்வாய், ஆம்பூர் கால்வாய், மஞ்சப்புளி கால்வாய், காங்கேயன் கால்வாய் மூலம் 9923 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகிறது.

ராமநதி அணையில் இருந்து 60 கனஅடி தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதன் மூலம் வடகால், தென்கால், பாப்பன்கால் புதுகால்வாய் மூலம் 4944 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

அணைகளின் நீர்மட்டம் நிலவரம்:

பாபநாசம் அணைக்கு விநாடிக்கு 583.68 கனஅடியும், மணிமுத்தாறு அணைக்கு விநாடிக்கு 103 கனஅடியும், கடனாநதி அணைக்கு விநாடிக்கு 108.48 கனஅடியும், ராமநதி அணைக்கு விநாடிக்கு 15 கனஅடியும் நீர்வரத்து இருந்தது. பாபநாசம் அணையில் இருந்து குடிநீர் தேவைக்காக 105 கனஅடியும், மணிமுத்தாறு அணையில் இருந்து பெருங்கால் பாசனத்திற்கு 35 கனஅடியும் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

பாபநாசம் அணையின் நீர்மட்டம் 101.60 அடியாகவும், சேர்வலாறு அணையின் நீர்மட்டம் 114.99 அடியாகவும், மணிமுத்தாறு அணையின் நீர்மட்டம் 56.05 அடியாகவும், கடனாநதி அணையின் நீர்மட்டம் 83.40 அடியாகவும், ராமநதி அணையின் நீர்மட்டம் 79.25 அடியாகவும் இருந்தது.

**"கால்நடைகளுக்கு ஈரமான தீவனங்களைத் தரக் கூடாது'**

First Published : 10 Nov 2011 12:05:02 PM IST

சிவகங்கை, நவ. 9: கால்நடைகளுக்கு ஈரமான தீவனங்களைத் தரக் கூடாது என்று சிவகங்கை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை மண்டல இணை இயக்குநர் (கூடுதல் பொறுப்பு) எஸ்.பாலகிருஷ்ணன் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் கூறியதாவது:

சிவகங்கை மாவட்டத்தில் 1,79,685 பசுக்கள், 4489 எருமைகள், 2,16,823 செம்மறி ஆடுகள், 2,49,379 வெள்ளாடுகள், 4,89,173 கோழிகள், 31 கழுதைகள், 3,988 பன்றிகள், 45,697 நாய்கள் உள்ளன.

முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக மழைக் காலங்களில் கால்நடைகளுக்கு ஏற்படும் வாய், கால் காணை நோய், ஆட்கொல்லி நோய், ஆந்திராக்ஸ் எனப்படும் அடைப்பான் நோய் ஆகியவை தாக்காமல் தடுப்பூசி போடப்பட்டுள்ளது. எனவே, இந்த மழைக் காலத்தில் எந்த கால்நடையும் இறக்கவில்லை.

மழைக் காலங்களில் மாடுகளை சேறும் சகதியுமாக உள்ள இடத்தில் கட்டி வைக்கக் கூடாது. மணல் நிரப்பிய பகுதியில் அவற்றை கட்ட வேண்டும். நீர் நிறைந்த பகுதிகளில் மேய்ச்சலுக்கு அனுமதிக்கக் கூடாது. கால்நடைகளுக்கு வைக்கோல், பிண்ணாக்கு ஆகியவற்றை ஈரமாக வைக்கக் கூடாது. இதனால் நோய் பரவும் வாய்ப்பு உள்ளது. மழை நீரில் நனைந்த தீவனமாக இருந்தால், அதை சுடுநீரில் போட்டு ஆறவைத்து கால்நடைகளுக்குத் தரலாம் என்றார்.

**மீன்கள் குறைவாகக் கிடைக்கும் காலத்தில் மீனவர்களுக்கு நிதியுதவி**

First Published : 10 Nov 2011 12:27:20 PM IST

புதுக்கோட்டை, நவ. 9: மீன்கள் குறைவாகக் கிடைக்கும் காலத்தில் மீனவக் குடும்பங்களுக்கு நிவாரணத் தொகை வழங்கும் புதிய திட்டத்தை தமிழக அரசு அறிவித்துள்ளது.

இதுதொடர்பாக புதுக்கோட்டை மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

மீன்பிடி குறைவாக உள்ள காலத்தில் சிரமப்படும் மீனவக் குடும்பங்களுக்கு தலா ரூ.4 ஆயிரம் நிவாரணத் தொகை வழங்கும் புதிய திட்டத்தில் கீழ்க்காணும் தகுதியுள்ள மீனவர்கள் பயன் பெறலாம்.

தகுதிகள் விவரம்:

மீனவர் குடும்பங்கள் என்பது கடல் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளோர், மீன் விற்பனை, வலை பின்னுவோர், மீன் பதப்படுத்துதல், இதர மீன்பிடித் தொழில் சார்ந்த தொழில் மேற்கொள்வோர்.

குடும்பத் தலைவர் அதாவது, கடல் மீனவர் அல்லது மீனவ மகளிர் மீனவர் கூட்டுறவுச் சங்கம், மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்க உறுப்பினராக இருக்க வேண்டும்.

மீனவர் குடும்ப உறுப்பினர் எவரும் தமிழகம், வெளி மாநிலங்கள், வெளிநாடுகள், அரசு, தனியார் நிறுவனங்களில் பணிபுரியக் கூடாது.

குடும்ப உறுப்பினர்கள் வேறு வருமானம் ஈட்டும் தொழிலில் ஈடுபட்டிருந்தால், இந்த நிவாரணத் தொகை பெறுவதற்கு தகுதி இல்லை.

மீனவர் குடும்பம் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தால் வழங்கப்படும் குடும்ப அட்டை வைத்திருக்க வேண்டும். மீனவர் குடும்பத்தில் குடும்ப அட்டையில் உள்ள ஒன்றுக்கும் மேல்பட்ட உறுப்பினர்கள் கடல் மீனவராக இருந்தாலும், நிவாரணத் தொகை குடும்பத்துக்கு மட்டுமே கிடைக்கும்.

விண்ணப்பிக்கும் முறை:

மேல்காணும் தகுதியுடைய கடல் மீனவர் குடும்பத் தலைவர், அவரது மனைவி, தலைவி, அவரது கணவர் ஆகியோர் தங்கள் வசிக்கும் கிராமத்தில் உள்ள ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் கூட்டு வங்கிக் கணக்கு தொடங்கி கணக்கு எண், வங்கி விவரம், வங்கியின் குறியீட்டு எண் ஆகியவற்றை விண்ணப்பப் படிவத்தில் நிரப்ப வேண்டும்.

இந்த விண்ணப்பப் படிவங்களை கூட்டுறவுச் சங்கத் தனி அலுவலரிடம் பெற்று, நிறைவு செய்து தேவைப்படும் சான்றிதழ்கள் (குடும்ப அட்டை நகல், மீனவர் அடையாள அட்டை நகல், வங்கிக் கணக்குப் புத்தகத்தின் நகல்) ஆகியவற்றை இணைத்து மீன் துறை அலுவலருக்கு அனுப்ப வேண்டும் என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

**வேளாண் கருவிகள் பயன்பாடு குறித்து இலவசப் பயிற்சி**

First Published : 10 Nov 2011 12:53:28 PM IST

தஞ்சாவூர், நவ. 9: நெல் சாகுபடியில் வேளாண் கருவிகளின் பங்கு குறித்து விவசாயிகளுக்கு இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் கா. பாஸ்கரன்.

இதுகுறித்து அவர் புதன்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நெல் சாகுபடியில் வேளாண் கருவிகளின் பயன்பாடு மற்றும் அவற்றின் பராமரிப்பு குறித்து நவம்பர் 21 ஆம் தேதி முதல் 27 ஆம் தேதி வரை இலவசப் பயிற்சி அளிக்கப்பட உள்ளது.

இந்தப் பயிற்சி தஞ்சாவூர், மானோஜிப்பட்டி சாலை, எண் 15, கிருஷ்ணாநகரிலுள்ள வேளாண்மைப் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் நடைபெறும்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்பும் தஞ்சாவூர், பூதலூர், ஒரத்தநாடு, திருவோணம், திருவையாறு ஒன்றிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் தங்களது பெயர்களை நேரிலோ அல்லது 98428 62692 கைபேசி எண்ணிலோ தொடர்பு கொண்டு பதிவு செய்யலாம் என்றார் அவர்.

**வேளாண்மை கணக்கெடுப்பு பயிற்சி**

First Published : 10 Nov 2011 10:26:54 AM IST

திருவண்ணாமலை, நவ. 9: வருவாய் ஆய்வர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான வேளாண்மைக் கணக்கெடுப்பு பயிற்சி திருவண்ணாமலை வட்டாட்சியர் அலுவலகத்தில் புதன்கிழமை நடைபெற்றது.

புள்ளியியல் துறை சார்பில் 5 ஆண்டுக்கு ஒருமுறை வேளாண்மைக் கணக்கெடுப்பு நடத்தப்படுகிறது. தற்போது 9-வது வேளாண்மைக் கணக்கெடுப்பு நடக்க உள்ளது.

இது தொடர்பான மாவட்ட அளவிலான பயிற்சியை மாவட்ட வருவாய் அலுவலர் ச.வளர்மதி கடந்த 2-ம் தேதி தொடங்கி வைத்தார். அதன் தொடர்ச்சியாக திருவண்ணாமலை வட்டத்தைச் சேர்ந்த வருவாய் ஆய்வர்கள், கிராம நிர்வாக அலுவலர்களுக்கான பயிற்சி நடைபெற்றது.

துணை வட்டாட்சியர் மாதவராஜ் பயிற்சியை தொடங்கி வைத்தார். புள்ளியியல் உதவி இயக்குநர் கே.பாலசுப்பிரமணியன், புள்ளியியல் ஆய்வாளர்கள் இ.ஏழுமலை, ஜி.செல்வக்கனி ஆகியோர் பயிற்சி அளித்தனர்.

---

தினமலர்

உண்மையின் உரைகல்

**தமிழகத்தில் புதிய உணவு பாதுகாப்பு சட்டம் அமல் : கலப்பட பொருள் விற்பனைக்கு "ஆப்பு'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,01:45 IST

சேலம்: உணவு பாதுகாப்பு மற்றும் தரங்கள் சட்டம், நாடு முழுவதும் மத்திய அரசால் கடந்த ஆகஸ்டு மாதம் அமல்படுத்தப்பட்டது. இச்சட்டம் மூலம், தரமற்ற பொருட்கள், கலப்பட பொருட்கள் விற்பனை போன்றவற்றை தடை செய்ய முடியும். ஏற்கனவே அமலில் இருந்த எட்டு சட்டங்கள் நீக்கப்பட்டு, அதில் உள்ள சாராம்சங்களை ஒருங்கிணைத்து, புதிய உணவு பாதுகாப்பு சட்டம் 2006 உருவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு மாநிலத்துக்கும், உணவு பாதுகாப்பு கமிஷனர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்துக்கு, கிரிஜா வைத்தியநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

மாவட்ட அளவிலும், ஒவ்வொரு உணவு பாதுகாப்பு அதிகாரி நியமனம் செய்யப்பட்டுள்ளார். அதன்படி, சேலம் மாவட்டத்துக்கு டாக்டர் அனுராதா நியமனம் செய்யப்பட்டு, பொறுப்பேற்றுக் கொண்டார். ஒவ்வொரு ஒன்றியத்துக்கும், ஒரு பாதுகாப்பு அலுவலரும் பணியாற்றி வருகின்றனர்.

அயோத்தியாபட்டணம் - ராஜமாணிக்கம், நங்கவள்ளி - இளங்கோவன், ஆத்தூர் - சுந்தரராஜன், பெத்தநாயக்கன்பாளையம் - கோவிந்தராஜ், தலைவாசல் - முனுசாமி, ஓமலூர் - சிங்காரவேல், சங்ககிரி - ஜான்கென்னடி, தாரமங்கலம் - சந்திரசேகரன், கெங்கவல்லி - ரவிகுமார், கொங்கணாபுரம் - இளங்கோ, சேலம் - ஜெகநாதன், இடைப்பாடி - தனசேகரன், மேச்சேரி - அசோக்குமார், மகுடஞ்சாவடி - ஈஸ்வரன், ஏற்காடு - சரவணன், காடையாம்பட்டி - அன்புமணி, கொளத்தூர் - சிவானந்தம், பனமரத்துப்பட்டி - ஆறுசாமி, வாழப்பாடி - ரவி, வீரபாண்டி - சிரஞ்சீவி உள்ளிட்டோர் பணியாற்றுகின்றனர்.

சேலம் மாநகரப் பகுதியில், தங்கராஜன், பாலு, மூர்த்தி, அர்ச்சுணன் ஆகியோர் பணியாற்றி வருகின்றனர். ஒவ்வொரு உணவுப் பொருள் விற்பனையாளரும், புதிய சட்டத்தின்படி, உணவு பாதுகாப்பு அலுவலரிடம் உரிமம் பெற விண்ணப்பிக்க வேண்டும். இனி, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி, ஊராட்சி அலுவலகங்களில் உரிமம் பெற தேவையில்லை. ஏற்கனவே, நடப்பு ஆண்டில் உணவு உரிமம் பெற்றவர்கள், அந்த உரிமத்தை கட்டணமின்றி உணவு பாதுகாப்பு உரிமமாக மாற்றிக்கொள்ளலாம். உணவு பொருள் விற்பனை நிலையம், உணவு பொருள் தயாரிப்பு நிலையம், மளிகை கடை, ஹோட்டல், டீக்கடை, பேக்கரி, சாலையோரக் கடைகள், பழக்கடைகள், இறைச்சிக் கடைகள், அனைத்து கேன்டீன்கள், பள்ளி, கல்லூரி உணவகங்கள் உள்ளிட்ட அனைத்து உணவு விற்பனை நிலையங்களும் உரிமம் பெற வேண்டும். அதற்கென உள்ள உணவு பாதுகாப்பு அலுவலர்கள் ஆய்வு நடத்த வருவர். விற்பனையாளர்களும், தயாரிப்பாளர்களும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். உணவு பொருள் குறைபாடு தொடர்பாக, மாவட்ட உணவு பாதுகாப்பு அதிகாரி அனுராதாவை, 94435 - 20332 எண்ணில் தொடர்பு கொண்டு, பொதுமக்கள் புகார் தெரிவிக்கலாம்.

**தமிழகம், கேரளாவில் முட்டை விலை 294 காசாக நிர்ணயம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,01:05 IST

கருத்தை பதிவு செய்ய

நாமக்கல்: தமிழகம், கேரளாவில் முட்டை விலை, 294 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டு வருவது, பண்ணையாளர் மத்தியில் மகிழ்ச்சியை

ஏற்படுத்தியுள்ளது. நாமக்கல்லில், தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் நடந்தது. முட்டை உற்பத்தி, மார்க்கெட் நிலவரம் குறித்து பண்ணையாளர்கள் விவாதித்தனர். அதையடுத்து, 291 காசுகளுக்கு விற்பனை செய்யப்பட்ட முட்டை, 3 காசுகள் உயர்த்தி, 294 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. முட்டை விலை தொடர் ஏற்றம் கண்டுவருவது, கோழிப்பண்ணையாளர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. அதே வேளையில், முட்டை விலையேற்றத்தால், ஹோட்டல் முட்டை சார்ந்த உணவுப் பொருட்களின் விலையேற்றம் அடையும் சூழல் உருவாகியிருப்பது, நுகர்வோர் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

நாட்டின் பிற மண்டலங்களில் முட்டை விலை விவரம்: சென்னை, 297 காசுகள், பெங்களூரு, 293 காசுகள், மைசூரு, 288 காசுகள், ஹைதராபாத், 281 காசுகள், மும்பை, 308 காசுகள், விஜயவாடா, 275 காசுகள், கோல்கத்தா, 318 காசுகள், பார்வாலா, 301 காசுகள், டில்லி, 312 காசுகள். இவ்வாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. நாமக்கல்லில் நேற்று நடந்த பண்ணையாளர், வியாபாரிகள் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், முட்டைக் கோழி விலை கிலோ, 44 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பல்லடத்தில் நடந்த கறிக்கோழி உற்பத்தியாளர் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், அதன் விலை கிலோ, 60 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டது.

**கரும்பு அறுவடை செய்யும் பணி "விறுவிறுப்பு' வெல்ல விலை உயர்வு எதிரொலி**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,01:05 IST

கருத்தை பதிவு செய்ய

ப.வேலூர்: ப.வேலூர் சுற்றுவட்டாரத்தில் உள்ள பெரும்பாலான வெல்ல ஆலைகளில், பண்டிகை விடுமுறை முடிந்தும், உற்பத்தி துவங்கப்படாமல் உள்ளது. அதனால், வெல்லத்தின் விலை கடும் ஏற்றம் கண்டுள்ளது. அதன் எதிரொலியாக, கரும்பு அறுவடை செய்யும் பணி, தற்போது விறுவிறுப்படைந்துள்ளது. ப.வேலூர் சுற்றுவட்டாரத்தில், காவிரிக் கரையோரம், 10 ஆயிரம் ஏக்கருக்கும் அதிகமான பரப்பளவில் ஆலைக் கரும்பு சாகுபடி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மோகனூரில் உள்ள கூட்டுறவு சர்க்கரை ஆலையை அடிப்படையாகக் கொண்டு, கரும்பு சாகுபடி அதிளவில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இங்கு சாகுபடி செய்யப்படும் கரும்பை மையப்படுத்தி, ஜேடர்பாளையம், சோழசிராமணி உள்ளிட்ட பகுதியில், வெல்ல தயாரிப்பு ஆலைகள் நிறைந்துள்ளன. அங்கு உற்பத்தி செய்யப்படும் கரும்பும், வெல்ல ஆலைகளுக்கு அனுப்பப்படுகிறது. இந்நிலையில், தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வெல்ல உற்பத்தி அதிகப்படுத்தப்பட்டிருந்தது. எனினும், வெல்லத்துக்கான தேவை அதிகமாக இருந்ததால், அவற்றை வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கிச் சென்றனர். அதன் காரணமாக, உற்பத்தி

மிகுந்திருந்தபோதும், வெல்லத்தின் விலை கணிசமான அளவு உயர்ந்து காணப்பட்டது. இந்நிலையில், தீபாவளிப் பண்டிகையையொட்டி பெரும்பாலான ஆலைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டது.

ஆலையில் பணிபுரியும் வெளி மாவட்ட தொழிலாளர்கள், அவர்களது சொந்த ஊருக்கு சென்றுவிட்டு மீண்டும் பணிக்கு திரும்பவில்லை. அதனால், மேற்குறிப்பிட்ட பகுதியில் செயல்படும் வெல்ல ஆலைகளில், உற்பத்தி துவங்கப்படாமல் உள்ளது. அதன் எதிரொலியாக, வெல்ல உற்பத்தி பாதியாக குறைந்துள்ளது. பொங்கல் உள்ளிட்ட பண்டிகைகள் அடுத்தடுத்து வருவதால், வெல்லத்தை வியாபாரிகள் அதிகளவு வாங்குகின்றனர். எனினும், உற்பத்தி குறைவால், வெல்லத்தின் விலை, "கிடுகிடு'வென உயர்ந்துள்ளது. வெல்ல விலையேற்றம், உற்பத்தியாளர்கள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. வெல்லத்தின் விலை உயர்வு காரணமாக, ஆலைக் கரும்பும் விலையேற்றம் அடைய வாய்ப்புள்ளது. எனவே, ப.வேலூர் சுற்றுவட்டாரப் பகுதியில், கரும்பு அறுவடை தீவிரமடைந்துள்ளது. அறுவடைப் பணி சூடுபிடிப்பால், விவசாய கூலித் தொழிலாளர்களும் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

**பால் உற்பத்தியில் பின்தங்கிய தமிழகம்**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,01:00 IST

பால் உற்பத்தியில் ஊக்கமின்மை காரணமாக, இந்தியளவில் பால் உற்பத்தியில் தமிழகம் இரண்டாம் இடத்திலிருந்து நான்காம் இடத்துக்கு பின் தள்ளப்பட்டுள்ளது. தமிழகம் முழுவதும், 8,012 பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கங்கள் மூலமாக விவசாயிகளிடம் இருந்து நேரடியாக பால் கொள்முதல் செய்யப்படுகிறது. அதில், 7,300 கூட்டுறவு சங்கங்கள் மட்டுமே முழுமையாக இயங்குகின்றன. 10 லட்சம் உற்பத்தியாளர்கள், தாங்கள் உற்பத்தி செய்த பாலை கூட்டுறவு சங்கங்களுக்கு விற்பனை செய்கின்றனர். தமிழகத்தில் ஈரோடு, சேலம், திருச்சி, விழுப்புரம், வேலூர் உள்ளிட்ட, 17 இடங்களில், "ஆவின்' நிறுவனம் செயல்படுகிறது.

தமிழகம் முழுவதும் உள்ள பால் உற்பத்தியாளர்கள் தினமும் தனியாருக்கு, 65 லட்சம் லிட்டர் பாலும், ஆவின் நிறுவனத்துக்கு, 90 லட்சம் லிட்டர் பாலும் விற்பனை செய்கின்றனர். ஈரோடு மாவட்டத்தில், 754 பால் கூட்டுறவு சங்கங்கள் மூலம், 2.10 லட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் சங்க மாநில பொதுச்செயலாளர் முனுசாமி கூறியதாவது: ஈரோட்டில், 722, கன்னியாகுமரியில், 70, திருநெல்வேலியில், 458, விருதுநகர், 85, தஞ்சை, 91, திருவாரூர், 44, பெரம்பலூர், 232, திண்டுக்கல், 173, மதுரை, 345, கடலூர், 250, திருவள்ளூரில், 37 என, தமிழகம் முழுவதும், 8,012 பால் கூட்டுறவு சங்கங்கள் உள்ளன. 23 லட்சம் லிட்டர் பால் ஆவின் நிறுவனத்தால் கொள்முதல் செய்யப்படுகிறது. அ.தி.மு.க., சட்டசபை தேர்தல் அறிக்கையில், பால் உற்பத்தியை ஒரு கோடி லிட்டராக உயர்த்துவதாக அறிவித்தது. ஆனால், இத்தொழில் நசிந்து கொண்டுள்ளது. பால் உற்பத்தி குறைவுக்கு முக்கிய காரணம் கட்டுப்படியாகாத கொள்முதல் விலையே.

கர்நாடகா, ஆந்திரா, புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் பால் உற்பத்தியை பெருக்க, 2 முதல்,3 ரூபாய் வரை விவசாயிகளுக்கு ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது. அதுபோல் வழங்க வேண்டும். தீவன விலை தற்போது உயர்ந்துள்ளது. ஆவின் தீவனம் நிறுத்தப்பட்டுள்ளது. மதுரை கப்பலூர், சென்னை மாதவரம், ஆம்பூர் ஆகிய இடங்கில் இருந்த கால்நடைத் தீவன ஆலைகள் மூடப்பட்டுவிட்டன. ஈரோட்டில் மட்டுமே, "ஆவின்' தீவன ஆலை செயல்பட்டு வருகிறது. ஈரோடு ஆலையும் முழுமையான செயல்பாடின்றி உள்ளது. அங்கு கலப்புத்தீவனம், 60 கிலோ மூட்டை, 468 ரூபாய்க்கு விற்பனையானது. இதன் உற்பத்தியை நிறுத்திவிட்டு, புரதச்சத்து என்ற பெயரில் கிலோ, 14.60 ரூபாய்க்கு புதிய தீவனம் அறிமுகமானது. இந்த தீவனத்தை பால் உற்பத்தியாளர்கள் யாரும் விரும்பவில்லை. கலப்புத்தீவனம் தயாரிப்பதை அரசு கைவிட்டுவிடும் போல் உள்ளது.

இலவசமாக கறவை மாடுகளை அரசு கொடுத்தால் மட்டும் போதாது; மானிய விலையில் கலப்பு தீவனம் கொடுக்க வேண்டும். இந்தியளவில் பால் உற்பத்தியில் கர்நாடகா மாநிலம் நான்காம் இடத்தில் இருந்து இரண்டாம் இடத்துக்கு முன்னேறியுள்ளது. தமிழகம் இரண்டாவது இடத்தில் இருந்து நான்காம் இடத்துக்கு சென்றுவிட்டது. குஜராத் மாநிலம் முதலிடம், ஆந்திரா மூன்றாமிடம் வகிக்கிறது. இவ்வாறு அவர் கூறினார்.

**வரத்து அதிகரிப்பு எதிரொலி வெற்றிலை விலை "வீழ்ச்சி!'**

பதிவு செய்த நாள் : நவம்பர் 11,2011,00:40 IST

வேலாயுதம்பாளையம்: வடகிழக்கு பருவமழையால் வே.பாளையம் பகுதிகளில் வெற்றிலை சாகுபடி அதிகரித்துள்ளது. ஒரு குடைக்கு 50 ரூபாய் வரை விலை வீழ்ச்சியடைந்துள்ளதால் வெற்றிலை பயிரிட்டுள்ள விவசாயிகள் கவலையில் உள்ளனர்.கரூர் மாவட்டத்தில் புகளூர்,

வேலாயுதம்பாளையம், நொய்யல், சேமங்கி, நடையனூர், மரவாபாளையம், கட்டிபாளையம், தவுட்டுபாளையம், திருகாடுதுறை உள்ளிட்ட பத்துக்கும் மேற்பட்ட ஊர்களில், குறிப்பாக காவிரி கரையோர பகுதிகளில் புகளூர் பாசன வாய்க்கால் மூலம் ஐந்தாயிரத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் விவசாயிகள் வெற்றிலை சாகுபடி செய்து வருகின்றனர். கடந்த சில மாதங்களாக வெற்றிலைக்கு கூடுதல் விலை கிடைக்காததால், வெற்றிலையை விவசாயிகள் உள்ளூர் பகுதிகளிலேயே பல்வேறு இடங்களில் விற்று வந்தனர். இந்நிலையில் சென்ற மாதம் திருமண சீஸன் உள்ளிட்ட சுபகாரியங்கள் துவங்கியுள்ள நிலையில் வெற்றிலைக்கு கடந்த ஒரு மாதமாக விலை அதிகரித்து வந்தது. இங்கு கற்பூர இளங்கால், கற்பூரகை, வெள்ளைக்கொடி கை ஆகிய ரகங்கள் பயிரிடப்படுகிறது.

வேலாயுதம்பாளையம் சுற்று பகுதியில் விளையும் கற்பூரம், வெற்றிலை ஒரு கவலி என்பது 102 வெற்றிலைகள், 20 கவலி என்பது ஒருகூடை, 26 கவிலிகள் கொண்டது ஒரு முட்டி, 104 கவலிகள் கொண்டது ஒரு சுமை என கூறப்படுகிறது. கடந்த மாதம் விலை அதிகரித்த வெற்றிலை தற்போது வடகிழக்கு பருவ மழையின் எதிரொழியால் வெற்றிலை கடுமையாக விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. கடந்த முகூர்த்த சீசனில் ஒரு கூடை 300 முதல் 350 ரூபாய் வரை தரத்திற்கு ஏற்றப்படி விற்ற வெற்றிலை, தற்போது ஒரு கூடை 250 முதல் 270 ரூபாய் விலை குறைந்துள்ளது.

இதுகுறித்து வெற்றிலை விவசாயிகள் சங்க செயலாளார் ராமசாமி கூறுகையில், "கடந்த வார முகூர்த்த சீசன் ஆரம்பித்ததால் வெற்றிலைக்கு விலையேறியது. இதே நிலை இந்தாண்டு முழுவதும் நீடித்திருந்தால், விவசாயத்திற்கு வாங்கிய கடன் அடைக்க முடியும். மழை காரணமாக உற்பத்தி அதிகரித்ததால் விலை வீழ்ச்சி அடைந்து விட்டது' என்றார்.

**கண்மாயில் கலக்கும் சாயப்பட்டறை நீர் : 400 ஏக்கர் விவசாயம் 10 ஏக்கராக குறைவு**

பதிவு செய்த நாள் : நவம்பர் 10,2011,22:42 IST

அருப்புக்கோட்டை : அருப்புக்கோட்டை பெரிய கண்மாயில் கலக்கும் சாயப்பட்டறை நீரால், 400 ஏக்கரில் நடந்த விவசாயம் தற்போது 10 ஏக்கராக குறைந்துள்ளது.இதன் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை தேவை என, விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர். அருப்புக்கோட்டை பெரிய கண்மாய் மூலம் 400 ஏக்கரில் விவசாயம் நடக்கிறது. நெல் மற்றும் காய்கறிகள் இங்கு அதிகம் பயிரிடப்படுகின்றன. கடந்த நான்கு ஆண்டுகளாக கண்மாயில் நீர் இருந்தாலும், அதை விவசாயத்திற்கு பயன்படுத்த முடியாது, சாயப்பட்டறை தண்ணீர் கலக்கிறது. இதனால் தண்ணீர் நிறம் மாறி நச்சு தன்மை ஏற்பட்டுள்ளது. இதன் நீரை விவசாயத்திற்கு பயன்படுத்தினால்

,பயிர்கள் பாதிப்பு அடைகின்றன. இதனாலே விவசாயம் செய்வதை விவசாயிகளும் குறைத்து கொண்டனர். தற்போது பெய்த மழையில் கண்மாய் நிறைந்தாலும், தண்ணீரோ நச்சு தன்மை உடையதாக இருக்கிறது. இதை பயன்படுத்தினால் பயிர்கள் அழிந்து விடும் என, விவசாயம் செய்ய தயங்குகின்றனர் விவசாயிகள் .

விவசாயிகள் கூறியதாவது: முன்பு 400 ஏக்கரில் நடந்த விவசாயம் தற்போது 10 ஏக்கரில் மட்டுமே நடைபெறுகிறது. கண்மாயில் ஆகாய தாமரை வேறு படர்ந்துள்ளது. நச்சுநீராக இருப்பதால், மீன்களும் வளர்க்க முடியவில்லை. கண்மாய் வரும் வரத்து கால்வாய்களும் தூர் வாரப்படாமல் உள்ளன. இதனால் இங்கு மழை நீரும் முழுமையாக வருவதில்லை. மறுகால் செல்லும் அளவிற்கு கண்மாயில் நீர் வந்தாலே, ஏற்கெனவே உள்ள நச்சு நீர் வெளியேறும். மழைநீரும் கண்மாயில் முழுமையாக தேங்கும். அப்போது இதை விவசாயத்திற்கு முழுமையாக பயன்படுத்தலாம், என்றனர். இதன் மீது மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை மேற்கொண்டு, கண்மாய், வரத்து கால்வாயை தூர்வாருவதோடு, சாயப்பட்டறை நீரை கண்மாயில் கலக்க விடாமல் தடுக்கவும் முன் வர வேண்டும். அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு வரவேற்பு

விருதுநகர் : விருதுநகர் மாவட்டம் வந்த செய்தி மற்றும் சிறப்பு திட்ட அமலாக்கத்துறை அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு அ.தி.மு.க.,வினர் சிறப்பான வரவேற்பு அளித்தனர். விருதுநகர் வந்த அமைச்சர் ராஜேந்திர பாலாஜியை ஒன்றிய குழு தலைவர் கி.கலாநிதி, நகராட்சி தலைவர் சாந்தி, எஸ்.ஆர்.நாகராஜன், ஒன்றிய செயலாளர் மூக்கையா, முன்னாள் நகர இளைஞரணி செயலாளர் மாரியப்பன், கவுன்சிலர் தங்கப்பாண்டியம்மாள், முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் அனந்தபத்மநாபன், ராஜ்குமார், பால்பண்ணை பழனியப்பன், விருதுநகர் முன்னாள் ஒன்றிய செயலாளர் எஸ்.கே.சீனிவாசன், மாவட்ட கவுன்சிலர் எஸ்.கே.சுப்பராஜ், ஒன்றிய கவுன்சிலர்கள் எம்.கந்தவேல், எம்.எஸ்.இசக்கிமுத்து, ஆர்.சேகர், அண்ணாதொழிற்சங்க எஸ்.ஆறுமுகம், பேரவை செயலாளர் கே.துரைப்பாண்டி, சிறுபான்மை பிரிவு செயலாளர் எஸ்.எஸ்.வி.கென்னடி வரவேற்றனர்.

காரியாபட்டி: காரியாபட்டி ஒன்றிய தலைவர் முத்துலட்சுமி , துணை தலைவர் ராமமூர்த்தி,மாநில பொதுக்குழு உறுப்பினர் பழனி, முன்னாள் நரிக்குடி ஒன்றிய தலைவர் ஜெயராஜா, பேரூராட்சி தலைவர் காந்திமதி , துணை தலைவர் பாரதாதேவி, நகர செயலாளர் விஜயன், ஒன்றிய கவுன்சிலர்கள் முருகன், கவிதா , இந்திரா , பழனிச்சாமி, அழகு, ஈஸ்வரி , கார்த்திகாதேவி , முன்னாள் ஒன்றிய கவுன்சிலர் ரகுபதி, இளைஞர் பாசறை- இளம்பெண்கள் பாசறை மாவட்ட செயலாளர் தினேஷ்பாபு, பேரூராட்சி கவுன்சிலர்கள், பரமசிவம், குருசாமி, உமாவதி, செல்லம்மா, பெரியசாமி, மகேஸ்வரி, ரம்ஜான்பேகம், அ.தி.மு.க.,பிரமுகர்கள் பாலமுருகன், ரவிச்சந்திரன்,

காரியாபட்டி "ஜெ' பேரவை செயலாளர் விஜயராஜன், எம்.ஜி.ஆர், நகர இளைஞரணி செயலாளர் பாண்டியராஜன், நகர இலக்கிய அணி செயலாளர் பாலகிருஷ்ணன், இளைஞர்-இளம்பெண்கள் பாசறை நகர செயலாளர் சந்துரு, நகர எம்.ஜி.ஆர்., மன்ற செயலாளர் மகாலிங்கம், விவசாய அணி செயலாளர் அழகர்சாமி, நகர மகளிர் அணி செயலாளர் சாமாயிவரவேற்றனர்.

வெம்பகோட்டை: மாவட்ட ஊராட்சித் தலைவர் வசந்தாஅழகர்சாமி,மாவட்ட ஊராட்சி துணை தலைவர் சுப்பிரமணியன், எம்.ஜி.ஆர்.,மன்ற செயலாளர் அழகர்சாமி, வெம்பக்கோட்டை ஒன்றிய தலைவர் ரேவதி , துணைத் தலைவர் மணிகண்டன், சிவகாசி தொகுதி பொறுப்பாளர் சிவக்குமார், வடமலாபுரம் கிளை செயலாளர் நெல்லைகுமார், குகண்பாறை ஊராட்சி தலைவர் ராஜி, தேன்ராஜ் உட்பட பலர் வரவேற்றனர்.

சிவகாசி : சிவகாசி வந்த அமைச்சரை ,நகராட்சி தலைவர்கள் கதிரவன்(சிவகாசி) தனலட்சுமி(திருத்தங்கல்) துணை தலைவர்கள் அசன் பதுரூதீன், சக்திவேல், ஒன்றிய தலைவர் ராதாகிருஷ்ணன், துணை தலைவர் சுப்பிரமணியம், விஜயா பிரஸ் உரிமையாளர் பாலசுப்பிரமணியன், ஒன்றிய செயலாளர் ஜெயச்சந்திரன், என்.ஜி.ஓ., காலனி ஜெ.பேரவை தலைவர் மாரிமுத்து, நகர ஜெ.பேரவை ரமேஷ், ஊராட்சி தலைவர்கள் சாந்திபிள்ளையார்(தேவர்குளம்) சுப்புராஜ்(சித்துராஜபுரம்) சீனிவாசன்(செங்கமலப்பட்டி ) கவுன்சிலர் முனீஸ்வரன், ஹலோ சிவகாசி மாத இதழ் ஆசிரியர் காளிராஜன், சங்கர் பிராசஸ் உரிமையாளர் முனீஸ்வரன், கன்னிகாபரமேஸ்வரி ஆலய தயாதிகள் சங்க செயலாளர் முத்துக்கண்ணன், அட்சயா கம்ப்யூட்டர் முத்துகிருஷ்ணன், வக்கீல் கணேச மூர்த்தி,முன்னாள் கவுன்சிலர்கள் முருகேசன், எம்.ஜி.ஆர்., இளைஞர் அணி நிர்வாகி நவரங்கராஜா, தேன்ரோஹினி, பாண்டியன், ஜெ. பேரவை நகர செயலாளர் ரமணப்பிரியன், ஜெ. பேரவை பெரியார் காலனி நிர்வாகி பால்பாண்டி, முத்துமாரி நகர் தலைவர் செல்வம் வரவேற்றனர்.

ஸ்ரீவில்லிபுத்தூர்:பிளவக்கல் அணையை திறந்து வைத்து விட்டு, சிவகாசி செல்லும் வழியில் ஸ்ரீவில்லிபுத்தூர் வந்த அமைச்சர் ராஜேந்திர பாலாஜிக்கு அ.தி.மு.க.,வினர் வரவேற்பு அளித்தனர். ராஜபாளையம் ஒன்றிய தலைவர் ஏ.எஸ்.பொன்னுத்தாய்,நகராட்சி தலைவர் செந்தில்குமாரி, வக்கீல் அணி மாவட்ட அவைதலைவர் சவுந்தரராஜன், செயலாளர் மங்களசாமி, துணை செயலாளர்கள் திலகராஜன், முருகன், ரமேஷ், சுரேஷ் நெப்போலியன், வக்கீல் ஜெகதீசன், இனாம் நாச்சியார் கோயில் ஊராட்சி தலைவர் சின்ன முனியாண்டி, உதவி தலைவர் முருகன், ஊராட்சிசெயலாளர் திருநாவுக்கரசு, ஒன்றிய கவுன்சிலர் நக்கமங்கலம் காளிமுத்து, எம்.ஜி.ஆர்.,இளைஞரணி நகர செயலாளர் முத்துராஜ், நகர எம்.ஜி.ஆர்,மன்ற செயலாளர் திருப்பதி, முன்னாள் கவுன்சிலர் சந்தான மூர்த்தி, மம்சாபுரம் பேரூராட்சி துணை தலைவர்

அய்யனார். மல்லி கம்மபாட்டி கிளை பிரதிநிதி ஜோதிமுனி, நெடுஞ்சாலை ஒப்பந்ததரார்கள் அண்ணாத்துரை, குழந்தை வேல் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**மதுரை ஆவினில் "சிண்டிகேட்' அமைத்து டெண்டர் எடுத்ததால் ரூ.ஒரு கோடி இழப்பு**

நவம்பர் 10,2011,10:12

மதுரை:மதுரை ஆவினில் இருந்து பால் எடுத்துச் செல்ல, கடந்த ஆட்சியில் அரசியல்வாதிகள் "சிண்டிகேட்' அமைத்து, டெண்டர் எடுத்ததால், நிர்வாகத்திற்கு ரூ.ஒரு கோடி இழப்பு ஏற்பட்டது. இம்முறையும் இழப்பை ஏற்படுத்த அரசியல்வாதிகள் முயன்றதால், மறுடெண்டர் விடப்படவுள்ளது.மதுரை ஆவினில் இருந்து தினமும் 42 வழித்தடங்களுக்கு, பால் வினியோகம் செய்யப்படுகிறது. இதற்காக இரண்டரை மெட்ரிக் டன் மற்றும் ஐந்தரை மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட லாரிகள் பயன்படுத்தப்படுகின்றன. இதற்காக இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை, டெண்டர் விடப்படும்.

இதற்கான அறிவிப்பு வெளியானவுடன் சுறுசுறுப்பு அடையும் அரசியல்வாதிகள், வெளியாட்களை உள்ளே அனுமதிக்காமல், பினாமி பெயரில் கூடுதல் விலைக்கு விண்ணப்பித்து டெண்டர் எடுக்கின்றனர். கடந்த ஆட்சியில், தி.மு.க., நிர்வாகிகளுக்கு நெருங்கிய தொடர்பில் இருந்தவர்கள் "சிண்டிகேட்' அமைத்து கூடுதல் விலைக்கு டெண்டர் எடுத்தனர். இதற்காக கட்சி நிர்வாகிகளுக்கு லாரி ஒன்றுக்கு ரூ.20 ஆயிரம் கமிஷனும் தந்தனர்.

குறைந்த விலையில் டெண்டர் எடுக்க ஆள் இருந்தும், கூடுதல் விலையில் எடுக்க "சிண்டிகேட்' அமைத்த அரசியல்வாதிகளால் ஆவின் நிர்வாகத்திற்கு ரூ.ஒரு கோடி இழப்பு ஏற்பட்டது.இந்நிலையில், 2011-13ம் ஆண்டிற்கான டெண்டர் நேற்று விடப்பட்டது. இதை முன்கூட்டியே அறிந்த அ.தி.மு.க., எம்.எல்.ஏ.,க்கள் இருவர், தங்களுக்கு சில வழித்தடங்களை ஒதுக்குமாறு அதிகாரிகளை மிரட்டினர். இவர்களை தொடர்ந்து, பகுதி, வட்ட செயலாளர்களும் மிரட்டினர். ஆனால் அதிகாரிகள் வழித்தடம் ஒதுக்க மறுத்து விட்டனர்.இதன்காரணமாக, நேற்று பலத்த போலீஸ் பாதுகாப்புடன் டெண்டர் விடப்பட்டது. ஒவ்வொரு வழித்தடத்திற்கும் குறைந்தது

மூன்று பேராவது விண்ணப்பித்திருக்க வேண்டும். ஆனால் ஆளுங்கட்சியினரின் மிரட்டலாலும், "சிண்டிகேட்' அமைக்க போவதாலும் ஒவ்வொரு வழித்தடத்திற்கும் ஒருவர், இருவர் என மொத்தமே 57 பேர் மட்டுமே விண்ணப்பித்திருந்தனர். இதில் இரு வழித்தடங்களுக்கு மட்டும் மூன்றுக்கும் மேற்பட்டோர் விண்ணப்பத்திருந்தனர். இதனால் அதற்கு மட்டும் டெண்டர் விடப்பட்டது. மற்ற வழித்தடங்களுக்கு மறுடெண்டர் விட ஆவின் நிர்வாகம் முடிவு செய்து உள்ளது.

தினகரன்

**விவசாயிகள் கவலை உறைபனியில் கருகின தேயிலை செடிகள்**

பதிவு செய்த நாள் : 11/11/2011 0:29:22



ஊட்டி : நீலகிரி மாவட்டத்தில் நவம்பர் 2வது வாரம் வரை மழை பெய்யும். அதன்பின் டிசம்பர் மாதம் துவக்கம் வரை நீர் பனி காணப்படும். டிசம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை தான் வழக்கமாக உறைபனி கொட்டும். இச்சமயங்களில், தாழ்வான பகுதிகளில் உள்ள புல் மைதானங்கள், காய்கறி செடிகள் மற்றும் தேயிலை செடிகளில் உறைபனி கொட்டும். அதிகாலை நேரங்களில் வெள்ளை நிற கம்பளம் விரித் தார் போல் பனிமூடி காட்சியளிக்கும். அதே சமயம் டிசம்பர் மாதம் பொழியும் பனியால், பெரும்பாலான தேயிலை தோட்டங்களில் உள்ள தேயிலை செடிகள் கருகிவிடும். புல் மைதானங்களில் உள்ள புற்கள் அனைத்தும் கருகிவிடும். சில இடங்களில் காய்கறி செடிகளும் கருகிவிடும்.

இது வழக்கமாக நடப்பது என்பதால் டிசம்பர் மாதத்தில் முன்கூட்டியே பனியில் இருந்து தேயிலை மற்றும் மலர் செடிகளை காப்பாற்ற போர்வைகள், தாவைகள் மற்றும் வைக்கோல் அடுக்குகளை

போட்டு விவசாயிகள் பயிர்களை காத்து வருவது வழக்கம். ஆனால், இந்த ஆண்டு நவம்பர் மாதம் துவக்கம் முதலே உறைபனி கொட்டத் துவங்கியுள்ளது. கடந்த இரு நாட்களாக ஊட்டி மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் உறை பனியின் தாக்கம் அதிகரித்துள்ளது.

இதனால், தேயிலை தோட்டங்களில் அங்காங்கே தேயிலை செடிகள் கருக துவங்கியுள்ளன. ஊட்டி அருகேயுள்ள வேலிவியூ பகுதியில் பனிப்பொழிவால் தேயிலை செடிகள் கருகியுள்ளன. இது போல் தலைகுந்தா, கிளன்மார்கன், சோலூர் மற்றும் நடுவட்டம் போன்ற பகுதிகளில் உள்ள தேயிலை செடிகளும் கருக துவங்கியுள்ளன. இதை விவசாயிகள் எதிர்பார்க்கவில்லை. உறைபனி கொட்டி, பயிர்கள் சேதம் அடைந்து வரும் நிலையில், விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

**தேயிலை விற்பனை மந்தம்**

பதிவு செய்த நாள் : 11/11/2011 0:27:35



குன்னூர்: நீலகிரி மாவட்டம் குன்னூர் அரசு கூட்டுறவு தேயிலை ஏல மையத்தில் இந்த ஆண்டுக்கான 45வது ஏலம் நேற்று நடந்தது. இதில் 3 லட்சத்து, 25 ஆயிரத்து, 43 கிலோ தேயிலைத்தூள் விற்பனைக்கு வைக்கப்பட்டது. இதில் இலை ரகம் 1 லட்சத்து, 71 ஆயிரத்து, 934 கிலோவும், டஸ்ட் ரகம் 1 லட்சத்து, 53 ஆயிரத்து, 109 கிலோவும் அடங்கும். வெளிநாடு, மற்றும் உள்நாட்டு வர்த்தகர்களின் பங்களிப்பு வழக்கம் போல் குறைந்ததால் இந்த வாரமும் 30% தேயிலைத்தூள் தேக்கமடைந்தது.

மேலும் கிலோ ஒன்றுக்கு ரூ.2 குறைந்தது. இந்த வார விலை நிலவரப்படி, இலை ரகத்தில் சாதாரண வகை ரூ.45 முதல் ரூ.50 வரையிலும், உயர்வகை ரூ.65 முதல் ரூ.70 வரையிலும், டஸ்ட் ரகத்தில் சாதாரண வகை ரூ.50 முதல் ரூ.55 வரையிலும், உயர்வகை ரூ.68 முதல் ரூ.72 வரையிலும் விலை கிடைத்தது.

**_ஊட்டியில் உறைபனி சீசன் தொடங்கியது நடுங்க வைக்கும் குளிரால் மக்கள் அவதி_**



ஊட்டி ரெயில் நிலைய புல்வெளியில் நேற்று காலை உறை பனி வெள்ளை கம்பளம் போல் படர்ந்திருந்ததை படத்தில் காணலாம்.

*ஊட்டி, நவ.11–*

*ஊட்டியில் மக்களை நடுங்க வைக்கும் உறைபனி சீசன் தொடங்கியது.*

*மழைக்காலம்*

*நீலகிரி மாவட்டத்தில் ஆண்டு தோறும் ஏப்ரல், மே மாதங்கள் கோடை சீசன் காலம் ஆகும். அதன் பிறகு ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதங்கள் மழைக்காலங்கள் ஆகும். தொடர்ந்து செப்டம்பர், அக்டோபர் 2–வது சீசன் காலமாகும். மேலும் அக்டோபர், நவம்பர் மாதங்களில் வடகிழக்கு பருவ மழை பெய்யும், நவம்பர் மாதம் இறுதியில் இருந்து பனிக்காலம் தொடங்கி விடும்.*

*இந்த ஆண்டு கடந்த ஜூன் மாதம் முதல் மழை பெய்து வந்தது. தென்மேற்கு பருவ மழை எதிர்பார்த்த அளவு பெய்ய வில்லை. இதனால் நீர் நிலைகளில் நீர்மட்டம் குறைய தொடங்கியது. இந்த சமயத்தில் கடந்த அக்டோபர் மாதம் இறுதியில் வடகிழக்கு பருவ மழை கொட்ட தொடங்கியது. இதனால் பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டன. கோத்தகிரியில் குப்பை, மண் சரிந்து 3 பேர் பலியானார்கள். ஒரு சில இடங்களில் மண்சரிவு, மரங்கள் விழுந்து போக்குவரத்து பாதிக்கப்பட்டது.*

உறைபனி சீசன் தொடங்கியது

கடந்த 7-ந் தேதி காலை முதல் மழை விட்டு வெயில் அடிக்க தொடங்கியது. 8-ந் தேதி முதல் பகல் நேரத்தில் கடும் வெயிலும், இரவு நேரத்தில் கடும் குளிரும் நிலவி வருகிறது. நேற்று முன்தினம் லேசான உறைபனி விழுந்தது.

இந்த நிலையில் நேற்று காலை கடும் உறைபனி விழுந்து இருந்ததை காண முடிந்தது. இதன் மூலம் மக்களை கடுமையாக வாட்டி வதைக்கும் உறைபனி சீசன் தொடங்கி உள்ளது. ஊட்டி நகரில் இதுவரை குறைந்த பட்சமாக 60 டிகிரி பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகி வந்தது. கடந்த 2 நாட்களாக 48, 49 என பாரன்ஹீட் வெப்பநிலை பதிவாகி உள்ளது. இந்த வெப்பநிலைக்கே உறைபனி கொட்டுகிறது என்றால், இன்னும் வெப்பநிலை குறையும் போது பனியின் தாக்கம் அதிகமாக இருக்கும்.

மக்களை வாட்டி வதைக்கிறது

பனிப்பொழிவு தொடங்கி விட்டதால் மாலை 6 மணிக்கு மேல் நகரில் மக்கள் நடமாட்டம் மிகவும் குறைவாகவே உள்ளது. இதனால் கடைகளில் கம்பளி ஆடைகளின் வியாபாரம் அதிகரித்துள்ளது.

மேலும் பனியின் தாக்கத்தில் இருந்து தப்பிக்க கூலி தொழிலாளர்கள், ஆட்டோ டிரைவர்கள் நெருப்பு மூட்டி குளிர்காய்கிறார்கள். தேனிலவுக்கு வரும் தம்பதிகளுக்கு குளிர் இதமாக இருந்தாலும், சுற்றுலா பயணிகளையும், உள்ளூர் மக்களையும் குளிர் வாட்டி வதைக்க தொடங்கி விட்டது. பகலில் அதாவது காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை எந்தளவுக்கு வெயில் அடிக்கிறதோ, அந்தளவுக்கு இரவில் குளிர் அதிகமாக இருக்கிறது.

தேயிலை செடிகள்

அதிகாலையில் பார்த்தால் புல்வெளிகளிலும்,தாவரங்களிலும் பனிதுளி வெண் போர்வை விரித்தாற்போல காட்சி அளிக்கிறது. பனியின் தாக்கம் தொடங்கி உள்ளதால் தேயிலை செடிகள் கருகும் அபாயம் ஏற்பட்டு உள்ளது. இதனால் தேயிலை மகசூல் பாதிக்கப்படும் அபாயம் உள்ளது.இந்த நிலையில் நேற்று மாலை 3 மணி அளவில் திடீரென்று ஊட்டி நகரில் மேக கூட்டங்கள் கூடின. மேலும் குளிர்காற்று வீசியது. இதனால் குளிர் அதிகரித்தது.

**பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேளாண் துறை உற்பத்தியில் 4% வளர்ச்சி ஏற்பட வேண்டும் மத்திய திட்டக் குழு வலியுறுத்தல்**



இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு

புதுடெல்லி

பணவீக்கம் அதிகரித்து வருவது மத்திய அரசுக்கு ஒரு சவாலாக உள்ளது. இதனை

*கட்டுப்படுத்த 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2012–17) வேளாண் உற்பத்தியை 4 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என திட்டக்குழு தெரிவித்துள்ளது.*

நெல்–கோதுமை

*இதுகுறித்து திட்டக்குழு உறுப்பினர் அபிஜித் சென் கூறுகையில் "நடப்பு 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–12) வேளாண்துறை உற்பத்தியில் 4 சதவீதம் வளர்ச்சி காண இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. ஆனால் 3.3–3.5 சதவீதம் மட்டுமே வளர்ச்சி ஏற்பட வாய்ப்புள்ளது" என்று தெரிவித்துள்ளார்.*

*நெல், கோதுமை உள்ளிட்ட உணவு தானியங்கள் உற்பத்தி நன்றாக உள்ள நிலையில், பருப்பு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துக்கள் உள்ளிட்ட இதர தானியங்கள் உற்பத்தி தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் போதுமான அளவிற்கு இல்லை என்று சென் மேலும் கூறியுள்ளார்.*

*காய்கறிகள், பருப்பு வகைகள், பழங்கள் மற்றும் பால் போன்ற அத்தியாவசிய பொருள்கள் விலை அதிகரிப்பால், அக்டோபர் 22–ந் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில் உணவு பணவீக்கம் கடந்த ஒன்பது மாதங்களில் இல்லாத அளவிற்கு 12.21 சதவீதமாக உயர்ந்துள்ளது. பொதுமக்கள் வருமானத்தில் பெரும்பகுதியை உணவு பொருள்களுக்காக செலவிட வேண்டி உள்ளது. இதனால் நுகர்வோர் சாதனங்கள் விற்பனை குறைந்து பொருளாதார வளர்ச்சி குறைந்து விடும் அபாயம் உள்ளது. எனவே பணவீக்கத்தை கட்டுப்படுத்த வேண்டியது அவசியமாகும்.*

*பணவீக்கம் என்பது தேவைப்பாட்டை ஈடுகட்டும் வகையில் உணவு பொருள்கள் கிடைக்காததாலும் பணப்புழக்கம் அதிகமாக இருப்பதாலும் ஏற்படுகிறது. கையில் அதிக பணம் புரள்வதால் பொருள்களை மித மிஞ்சிய அளவில் வாங்கத் தூண்டும். இதனடிப்படையில் பாரத ரிசர்வ் கடந்த 19 மாதங்களில் முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை 13 முறை உயர்த்தி உள்ளது.*

*இந்நிலையிலும் பணவீக்கம் கட்டுக்குள் வரவில்லை. கடந்த 2010 டிசம்பர் மாதத்திலிருந்து நாட்டின் பொது பணவீக்கம் 9 சதவீதத்திற்கும் அதிகமாக உள்ளது. கடந்த செப்டம்பர் மாதத்தில் இது 9.72 சதவீதமாக உயர்ந்தது. பணவீக்கத்தை கட்டுப்படுத்துவதற்காக பாரத ரிசர்வ் வங்கி பல முறை முக்கிய கடன்களுக்கான வட்டி விகிதங்களை உயர்த்தியதையடுத்து, வங்கிகள் வீடு மற்றும் வாகன கடனிற்கான வட்டி விகிதங்களை உயர்த்தி வருகின்றன. இதனையடுத்து கடந்த அக்டோபர் மாதத்தில் கார்கள் விற்பனை கடந்த 10 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு 24 சதவீதம் சரிவடைந்தது. தொழில்துறை உற்பத்தி வளர்ச்சி வேகமும் குறைந்து வருகிறது.*

*பிரணாப் முகர்ஜி*

*தற்போதைய பணவீக்கம் அதிகரிப்பிற்கு வேளாண் உற்பத்தி வளர்ச்சியில் ஏற்பட்டுள்ள பின்னடைவே முக்கிய காரணம் என சென் தெரிவித்துள்ளார். மத்திய நிதி அமைச்சர் பிரணாப் முகர்ஜி பணவீக்கத்தை கட்டுப்படுத்த உணவு தானியங்கள் போதுமான அளவிற்கு கிடைக்கும் வகையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என தெரிவித்துள்ளார். இதுபோன்ற காரணங்களால் வரும் 12–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் வேளாண் உற்பத்தியை 4 சதவீதம் அதிகரிக்க வேண்டும் என திட்டக்குழு தெரிவித்துள்ளது.*